COS.No.6/2022 பெயர் : ஜெகநாத் நாள் : 22.09.2025

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

வாதி நிறுவனம் போல் வேறு நிறுவனங்களை Endorlment Packet பணியை செய்வதற்கு வேலையை ஒப்படைத்திருந்தோம் என்றால், சரிதான். Endorlment Packet தயார் செய்ததற்கான தொகையை எங்கள் நிறுவனம் கேட்டதா என்றால், அறிக்கை UIDAI-லிருந்து எங்கள் நிறுவனத்திற்கு அறிக்கை வந்தபின்னிட்டே, தொகையை கேட்க முடியும். அந்த UIDAI நிறுவனம் நாங்கள் அமர்த்திய மற்ற நிறுவனங்கள் செய்த பணியை குறித்து அறிக்கை அனுப்புவார்கள் என்றால், பணியை சரிபார்த்து அனுப்புவார்கள். அதற்கு ஏற்ப சரியாக உள்ளதைப் பொறுத்து, எங்கள் நிறுவனம் தொகையை கேட்கும் என்றால், சரிதான். 3, 4 பதிவாளர்கள் இருப்பார்கள், அவர்களிடம் எங்கள் நிறுவனம் தொகையை கேட்கும். வாதி நிறுவனத்திற்கு எங்கள் நிறுவனம் கொடுத்த வேலை எந்த பதிவாளருக்கு கீழ் வந்தது என்றால், இந்தியா போஸ்ட், பேங்க் ஆப் பரோடா என்ற 2 பதிவாளர்ளின் கீழ் வந்தது ஆகும். வாதி நிறுவன அலுவலர்கள் செய்த வேலை எவ்வளவு என்று எங்கள் நிறுவனம் தொகையை கேட்டது என்றால், எனக்கு தெரியாது. தொகை கேட்ட விபரங்கள் உங்கள் நிறுவனத்திடம் தான் உள்ளது என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. வாதி நிறுவன ஊழியர்கள் எவ்வளவு Endorlment Packet தயார் செய்தார்கள் என்று குறிப்பிட்டு, தொகையை கேட்டோம் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. வாதி நிறுவன அலுவலகர்கள் மொத்தமாக எவ்வளவு Endorlment Packet தயார் செய்தார்கள் என்றும், அதன் மூலம் எவ்வளவு UID ஜெனரேட் செய்யப்பட்டது, என்று கேட்டால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கையில்

பத்தி 9-ல் வாதி நிறுவன அலுவலர்கள் குறித்த நேரத்தில், வேலை செய்து கொடுக்காமல், அவர்கள் முடித்து கொடுத்த வேலையின் பெரும்பகுதி நிராகரிக்கப்பட்டது, நாங்கள் எதிர்பார்த்தபடி, வேலையை வாதி நிறுவனத்தின் வேலையாட்கள் செய்து தராதால், பதிவாளர்கள் எங்களுக்கு கொடுக்க வேண்டிய தொகையை நிறுத்தி வைத்து விட்டார்கள் என்பதை நிரூபிக்க நாங்கள் என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளோம் என்றால், எங்கள் நிறுவனம் கடிதம் அனுப்பியுள்ளது, அந்த கடிதம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது, அது 02.11.2022 என தேதியிடப்பட்டுள்ளது. வாதி நிறுவனம் 2013 முடிய மட்டுமே எங்கள் நிறுவனத்திற்காக வேலை செய்தது என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. பி.வா.சா.ஆ.1 இந்த வழக்கிற்கு பின்னிட்டு, தயார் செய்யப்பட்டது என்று சொன்னால், சரிதான். அந்தந்த பதிவாளர்களிடம் கேட்டுக்கொள்ளுமாறு எங்கள் நிறுவனத்திடத்திடமிருந்து பதில் வந்தது, அது பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப் பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தைக் குறித்து எங்கள் நிறுவனம் என்ன நடவடிக்கை மேற்கொண்டது என்றால், நேரடியாக சென்று இந்தியா போஸ்ட் பைனான்ஸ் இயக்குநரிடம் கேட்டு வந்தோம். அப்படி கேட்டதற்கு உங்களிடம் ஆவணம் ஏதாவது உள்ளதா என்றால், உள்ளது. மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், இல்லை, தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

எனது பிரமாண நிரூபண வாக்குமூலத்தில் 9,10,11,12,13,14 பத்திகளில் வாதி நிறுவன ஆட்கள் வேலை செய்யாததால், எங்கள் நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய தொகை நிராகரிக்கப்பட்டு விட்டது என குறிப்பிட்டுள்ளேன், அது தொடர்பாக நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். நான் 09.09.2025-ம் தேதி அன்று நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணையின் போது, எங்கள் நிறுவன மின்னஞ்சல்களை பரிசீலித்து விட்டு வருவதாக சென்றேன் என்றால், நாங்கள்

பரிசீலித்தோமா என்றால், 2018-ம் முன்பிருந்த மின்னஞ்சல்கள் அழிந்துவிட்டன. வாதி நிறுவனம் 2018-ம் வருடத்திலிருந்து தொடர்ந்து எங்கள் நிறுவனத்திற்கு மின்னஞ்சல்கள் அனுப்பி வந்தார்கள், அதை தற்போது நீங்கள் வழக்கிற்காக மறுக்கிறீர்கள் என்றால், சரியல்ல. மஞ்சுநாத் என்பவர் எங்கள் நிறுவன அலுவலகத்தில் வேலை பார்த்து வந்தார் என்றால், நிறைய நபர்கள் எங்கள் நிறுவனத்தில் வேலை பார்த்து வருவதால், மஞ்சுநாத் என்பவர் வேலை செய்து வந்தாரா என்பதைப் பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் நான் தான் என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படுவது எங்கள் நிறுவனம், வாதி நிறுவனத்திற்கு 01.12.2015-ம் தேதி மின்னஞ்சல் மூலம் அனுப்பிய பதில் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மின்னஞ்சல் மூலம் அனுப்பிய பதிலில் MD@globaifinsol.com என மின்னஞ்சல் முகவரி குறிப்பிடப் பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த மின்னஞ்சல் முகவரி என்னுடையது என்றால், சரிதான். எங்கள் நிறுவன ஊழியர் K.மஞ்சுநாத், Accounts Manager ரமேஷ்குமார், மற்றும் ஆசாத் யார் என்றால், அவர் எங்கள் நிறுவன ஊழியர். மேற்படி நபர்கள் சேர்ந்து 11.09.2014-ம் தேதி அன்று வாதி நிறுவனத்திற்கு அனுப்பிய மின்னஞ்சலில் 09.09.2014 அன்று பைனல் செட்டில்மெண்ட் தொகை ரூ.24,44,157/- என உறுதி செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்கள் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது, (பிரதிவாதி வழக்கறிஞர் மேற்படி கேள்விக்கு ஆட்சேபணை தெரிவித்தார்).

MD@globaifinsol.com என்ற எனது மின்னஞ்சல் முகவரிக்கு 21.09.2013-ம் தேதி அன்று என்னிடம் காட்டப்படும் கடிதம் அனுப்பப்பட்டது என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் 23.12.2012-ம் தேதி அன்று வாதி நிறுவன அலுவலர்கள் எங்கள் நிறுவனத்திற்கு அனுப்பிய Daily Endorlment Report அடங்கிய மின்னஞ்சல் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படுவது வாதி

நிறுவனத்திடமிருந்து 31.01.2012-ம் தேதி Endorlment Packet செய்ததைக் குறித்து மின்னஞ்சல் அனுப்பி உள்ளார்கள் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. வாதி நிறுவன அலுவலர்கள் ஆதார் அட்டை தயார் செய்வதற்கு அணுகும் ஒவ்வொரு நபரிடமும் E ID Acknowledgment பெறுவார்கள் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. வாதி நிறுவன ஊழியர்கள் செய்யும் வேலை Digital Work, அது அதற்காக தனியாக உள்ள இயந்திரங்களில் பதிவு செய்வதாகும், அந்த வேலைகளில் ஏதேனும் தவறு ஏற்பட்டிருப்பின் அது எந்த தேதியில், எந்த Endorlment Centre-ல் எந்த Station ID-ல் எந்த Operater User ID-ல் எந்த Endorlment Packet-ல் நடந்து என்று கண்டுப்பிடிக்க முடியும் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. அதனால், வாதி நிறுவனம் குறைபாடாக வேலை செய்தார்கள் என்றும், அதனால் உங்களுக்கு இழப்பு ஏற்பட்டு விட்டது என்றும், ஆதாரமில்லாமல், பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால், அது தவறு. குறைபாடாக வேலை செய்தார்கள் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் எங்கள் தரப்பில் அனுப்பப்பட்ட எந்த மின்னஞ்சலிலும், வாதி நிறுவன அலுவலர்கள் பணியை குறைபாடாக செய்தார்கள் என்று குறிப்பிடவே இல்லை என்றால், அது தவறு. குறைபாடுகள் இருப்பதாக நீங்கள் தெரிவிக்காததால் தான் அழிக்கப்பட இயலாத மின்னஞ்சல்களை, அழிந்து விட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால், அது தவறு. வாதி தரப்பில் எங்களுக்கு கணக்குகளையும், மின்னஞ்சல் தகவல்களின் நகல்களையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி மனு தாக்கல் செய்யப்பட்டது, அதற்கு நீங்கள் தவறான பதில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால், சரியல்ல. உரிய ஆவணங்களை தாக்கல் செய்யாமல், நீதிமன்றத்தில் நீங்கள் சாட்சியத்தை மறைத்துள்ளீர்கள் என்றால், சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு, பொய்சாட்சியத்திற்காக ஆவணங்களை

உருவாக்கி பி.வா.சா.ஆ.1 முதல் 6 வரை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. வாதி நிறுவன ஊழியர்கள் செய்த பணியில் எந்த குறைபாடும் இல்ல என்றாலும், நீங்கள் வாதி நிறுவனத்திற்கு தர வேண்டிய தொகையில் Penalty Impose செய்வதற்கு ஒப்பந்தத்தில் எவ்வித வழிவகையும் செய்யப்படவில்லை, அதையும் மீறி நீங்கள் வேண்டும் என்றே வாதி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தாமல், தவிர்க்கும் பொருட்டு Penalty Impose செய்யப்பட்டதாக தவறாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால், சரியல்ல.

வாதி வழக்குரையில் ரூ.40,42,904/- நாங்கள் செலுத்தியதாக குறிப்பிட்டுள்ளதை ஒப்புக் கொள்கிறேன். அதனால் மீதி செலுத்த வேண்டிய தொகை ரூ.13,60,174/- செலுத்தும் கடப்பாடு எங்களுக்கு உள்ளது என்றால், சரியல்ல. எங்கள் நிறுவனம் தாமதப்படுத்தியதால், 18% வட்டி நாங்கள் செலுத்தவேண்டும் என்றால், சரியல்ல. எனது சாட்சியம் பொய் என்று சொன்னால், சரியல்ல. எனது சாட்சியம் நிராகரிக்கப்படவேண்டும் என்று சொன்னால், சரியல்ல.